**<u>தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள்.</u>**

**<u>பிறப்பிப்பவர் : திருமதி.கி.சிந்து, எம்.ஏ.,</u>**

ந.க. அ2/08/2020 நாள் : .05.2024

பொருள்: **பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம்** – தேனி மாவட்ட வருவாய் அலகு – போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகம் – அலுவலக உதவியாளர் – திரு. ச. பால்பாண்டி – 30.04.2016 அன்று பணியிடையே காலமானது – அவரது மகன் திரு.பா. வடமலுமுத்து – இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – 10.02.2023 பி.ப. முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1) தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.அ2/2022/2023, நாள்:03.02.2023.
2) தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.அ2/2022/2023, நாள்:09.02.2023.
3) தேனி மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.ந.கஅ2/08/2020, நாள். 07.02.204
4) அரசுக்கடிதம் எண் G2/2023/5532மனிதவள மேலாண்மைத் (G ) துறை நாள் 20.09.2023
5) அரசுக் கடித (1 டி) எண் 64 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு நாள் – 18.01.2024
6) கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாய ஆணையர், சென்னை அவர்களின் கடித எண் ஆ.கு 3/4600/2024 நாள் 20.02.2024

((()))

<u>ஆணை :–</u>

தேனி மாவட்ட வருவாய் அலகு, போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி கடந்த 30.04.2016 அன்று பணியிடையே காலமான திரு.ச.பால்பாண்டி என்பவரின் மகன் திரு.பா.வடமலுமுத்து என்பவருக்கு பார்வை 1–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டது. அதன்படி, பார்வை 2–ல் காணும் செயல்முறை ஆணையில், தனியருக்கு கருணை அடிப்படையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியிடம் வழங்கப்பட்டு 10.02.2023 பிற்பகல் முதல் பணிபுரிந்து வருகின்றார்.

தனியர், இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 10.02.2023 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிட அரசின் ஆணையினைப் பெற்றுத்தருவதற்கு, சென்னை, கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில், கருணை அடிப்படையில், பணிநியமனம் பெற்றவர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக அரசால் தெளிவுரைகள் வழங்கப்பட்டதன் பேரில், அசல் முன்மொழிவுகள் சென்னை, வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை (6) இல் காணும் கடிதத்தில், பத்தி எண் 6(III)– இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

III. பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும்பணியினை , ஏனைய விதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் , பார்வை (4) இல் காணும் அரசுமனித வள , மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி வரன்முறை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்நேர்வில், பார்வை (4) – இல் காணும் கடிதத்தில் பத்தி எண்–3 இல், பின்வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3) The Services of the Government servants, who are appointed or yet to be appointed, on Compassionate Grounds, shall be regularized as per the Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds)Rules, 2023.

மேற்காணும் தெளிவுரையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியினை தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 இல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படி பணிவரன்முறை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரசாணை 33.நிலை) எண்) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு1–க்யூ))த் துறை, நாள்08.03.2023 . , **தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 – இல் பணிவரன்முறை என்னும் தலைப்பில்** பின்வருமாறு விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

**16. Regularization of appointments.— Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a period of one year from the date of his joining service, subject to eligibility.**

மேற்காணும் விதியில், பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும் **பணியினை** , ஏனைய விதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில், நியமன அலுவலரால் பணிவரன்முறை செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கருணை அடிப்படை பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் தனியர் பூர்த்தி செய்திருப்பதாலும், விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத காரணத்தினாலும் **இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியேற்பு செய்த நாளான 10.02.2023 பிற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.**

Signed by
Sindhu Radhakrishnan
Date: 21-05-2024 14:10:51

மாவட்ட ஆட்சியரின்
**நேர்முக உதவியாளர்(பொது)**
**தேனி.**

பெறுநர்
திரு.பா. வடமலுமுத்து,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி.

**நகல்:-**

1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்கு), தேனி.
2. அ2 இருப்புக்கோப்பிற்கு